# 1 காவல்காரர்

சட்டை மேலே கோட்டு மாட்டிச்
சரிகை போட்ட வேட்டி கட்டி
நட்ட நடுவே தோட்டம் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்

இரவும் பகலும் தூங்கி டாமல்
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்
பெருமை யோடு காவல் காப்பார்
பெயரில் லாத காவல் காரர்

காக்கை குருவி அங்கே வந்தால்
காவல் காரர் நிற்கக் கண்டு
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு

காற்று பலமாய் அடித்த தாலே
கனத்த மழையும் பெய்த தாலே
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ

இதனைக் கண்ட காகம் ஒன்று
இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே என்று கருதி

அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு வெள்ளைச் சட்டை
கட்டிக் கொள்ள சரிகை வேட்டி





Tamil 4th-std_Term2.indd 1 8/7/2019 6:03:16 PM



எடுத்து வந்து காவல் காரர்
இருக்கும் இடத்தில் போட்டு விட்டே
உடுத்திக் கொள்வீர் என்று சொல்லி
ஒதுங்கி நின்று பார்த்த தங்கே

காவல் காரர் பழைய உடையைக்
கழற்றிக் கீழே போட வில்லை
ஆவ லோடு புதிய உடையை
அணிய வில்லை அசைய வில்லை

உடனே காகம் அருகில் சென்றே
உற்று நன்றாய்ப் பார்த்த பின்னர்
அடடே இந்தக் காவல் காரர்
யாரோ என்று நினைத்தி ருந்தேன்

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
வைத்தி ருக்கும் பொம்மை என்றே
இக் கணத்தே நண்பர் அறிய
எடுத்துச் சொல்வேன் என்று கூறி,

காவல் காக்கும் பொம்மை தலையில்
காலை வைத்து நின்று கொண்டு
கூவி அழைத்துப் பறவை யாவும்
கூடச் செய்து விட்ட தங்கே

– அழ. வள்ளியப்பா

ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன்



Tamil 4th-std_Term2.indd 2 8/7/2019 6:03:17 PM

## பொருள் அறிவோம்

தோட்டத்தின் நடுவில் நின்றிருந்த சோளக்கொல்லைப் பொம்மையைக் காவல்காக்கும் உயிருள்ள மனிதர் என்று காகம் நினைக்கிறது. கனத்த மழையால் ஆடைகள் கிழிந்து நிற்கும் அந்தப் பொம்மையிடம், புதிய ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டுகிறது. ஆனால், அஃது அணிந்து கொள்ளாததால், உயிரற்ற பொருள் என்பதை உணர்ந்து கொள்கிறது. அதனால், அச்சமின்றி மற்ற பறவைகளையும் கூவி அழைக்கிறது.

## நூல் குறிப்பு

'மலரும் உள்ளம்' என்னும் நூலின் இரண்டாம் தொகுதியில் இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியவர் அழ. வள்ளியப்பா. இவர் குழந்தைகளுக்கான கதைகளையும் பாடல்களையும் மிகுதியாகப் பாடியுள்ளமையால், குழந்தைக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்.



## வாங்க பேசலாம்

- கதைப்பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலின் பொருளைப் புரிந்துகொண்டு பாடுக.
- பாடல் பொருளை உமது சொந்த நடையில் கூறுக




சூழல் 1

மீனாவின் அம்மா மீனாவுக்கு மட்டுமின்றி மீனாவின் நண்பர்களுக்கும் பிறந்த நாள் வாழ்த்துகள் தெரிவிக்கிறார்.

சூழல் 2

வளவனின் அப்பா யார் எந்த உதவி கேட்டாலும் நீ செய்யக் கூடாது என்று கூறுகிறார்.

இதுபற்றி உங்கள் கருத்து என்ன?



Tamil 4th-std_Term2.indd 3 8/7/2019 6:03:18 PM

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'பெயரில்லாத' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................................

அ) பெயர் + இலாத ஆ) பெயர்+ இல்லாத

இ) பெயரில் + இல்லாத ஈ) பெயரே + இல்லாத

02 வைக்கோல் மேலே துணியைச் சுற்றி வைத்திருக்கும் பொம்மை இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் ...............................................

அ) கீழே ஆ) அருகில்

இ) தொலைவில் ஈ) வளைவில்

03 'சோளக்கொல்லைப் பொம்மை' என்பது ...............................................

அ) உயிருள்ள பொருள் ஆ) உயிரற்ற பொருள்

இ) இயற்கையானது ஈ) மனிதன் செய்ய இயலாதது

04 அசைய+ இல்லை– இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ...............................................

அ) அசைய இல்லை ஆ) அசைவில்லை

இ) அசையவில்லை ஈ) அசையில்லை

05 நித்தம் – இச்சொல்லுக்குரிய பொருள் ...............................................

அ) நாளும் ஆ) இப்பொழுதும்

இ) நேற்றும் ஈ) எப்பொழுதும்

E9PP1N

### வினாக்களுக்கு விடையளிக்க.

01 தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றது எது?

02 காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி யாது?

03 பொம்மைக்குக் கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டை கொடுத்தது எது?

04 காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் ஏன் அணியவில்லை?




Tamil 4th-std_Term2.indd 4 8/7/2019 6:03:18 PM

## முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.

சட்டை ______ சரிகை ______ ______ ______

______ ______ ______ ______

## மேகங்களுக்குப் பொருத்தமான மழைத்துளிகளை இணைக்க.




**இணைத்த சொற்களைக் கீழே எழுதுக.**

1. சரிகை வேட்டி
2. ______
3. ______
4. ______
5. ______

## பாடலைத் தொடர்ந்து பாடுவோமா?

மக்கள் ஒன்று கூடியே
மகிழ விரும்பும் திருவிழா
குழந்தைச் செல்வம் யாவுமே
கூடிஆடும் திருவிழா

______
______
______
______



Tamil 4th-std_Term2.indd 5 8/7/2019 6:03:18 PM

## உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

நமக்குப் பயன்தரும் மரங்களுள் வாழையும் ஒன்று. வாழையின் பூ, காய், கனி, தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம். வாழைநாரைக் கொண்டு பூக்களைத் தொடுக்கிறோம். திருமண விழாக்களிலும் வீட்டில் நடைபெறும் விழாக்களிலும் வாழையிலையில் விருந்து படைக்கின்றனர். வாழையில் செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை எனப் பலவகைகள் உள்ளன.



**வினாக்கள்**

1. வாழையின் எப்பகுதிகள் உணவாகப் பயன்படுகின்றன?
2. வாழைநார் எதற்குப் பயன்படுகிறது?
3. வாழையின் வகைகளுள் இரண்டை எழுதுக.
4. வாழையிலை – இச்சொல்லைப் பிரித்து எழுதுக.
5. பலவகை – இச்சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுக.



## செயல் திட்டம்

**உங்கள் இருப்பிடத்திற்கு அருகிலிருந்து கீழ்க்காணும் செய்திகளைத்திரட்டுக.**

1. தோட்டத்தின் பெயர்
2. உரிமையாளர் பெயர்
3. தோட்டம் அமைந்திருக்கும் ஊர்
4. நீர்வசதி கிணறு/ அடிகுழாய்/ ஆறு/குளம்
5. தோட்டத்தில் விளையும் காய்கறி / பழம் பெயரைக் குறிப்பிடுக.
6. தோட்டம் பற்றிய உனது கருத்து நன்றாக உள்ளது/ ஓரளவு / வளர்ச்சிதேவை

## அறிந்து கொள்வோம்

1. தோட்டத்தில் பூச்சித் தாக்குதலைத் தடுக்க முட்டை ஓட்டுத் தூளுடன், சிறிது உப்பைக் கலந்து செடியைச் சுற்றிலும் வளையம் போட வேண்டும்.
2. வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைகொல்லிகள் தாவரங்களின் கனிம வளங்களைக் குறைக்கின்றன.
3. மண் அரிப்பைத் தடுக்க மரங்கள் நட்டு வளர்த்தல் இன்றியமையாதது.



Tamil 4th-std_Term2.indd 6 8/7/2019 6:03:19 PM